கூலிகள்

கிடைக்கற்பால தரவின்படி அரச ஊழியர்களின் பணக்கூலிகள் 1978இலும் பார்க்க 1979 இல் விரைவாக அதிகரித்துள்ளன. தொழில் நுட்ப, எழுது வினைஞர் ஊழியர்களின் பணக்கூலிகள் முந்திய ஆண்டின் 12 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக 16 சத வீதத்தால் அதிகரித்துள்ளன. சிற்றூழியர்கள் பாடசாலை ஆசிரியர்கள் விடயத்தில் பணச் கூலிகளின் அதிகரிப்பு 1978 இன் முறையே 1,610 சதவீத அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் முறையே 21, 15 சத வீதங்களாகும் இவ் அதிகரிப்புக்கள் சனவரில் வழங்கிய திரட்டப்பட்ட சம்பளத்தின் 10 சதவீத அதிகரிப்பிலிருந்தும் செத்தெம்பரில் ரூ. 55/- கொண்ட மேலும் குறைநிரப்புப் படிகளிலிருந்தும் ஏற்பட்டது,

அரச ஊழியர்களின் உண்மைக் கூலிகள், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை பணப்பெருக்கக் குறைவுபடுத்தியாக பயன்படுத்துமிடத்து பணக்கூலி வீதங்களிலும் பார்க்க குறைந்தவீத அதிகரிப்பைக் காட்டியது. எனினும் உண்மைக் கூலிகள் வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டிருந்த போதிலும் இது 1978 வரை ஏற்பட்டதொரு திருந்திய நிலையாகும். முந்திய ஆண்டில் மாற்ற முறாது இருந்த தொழில் நுட்ப எழுதுவினைஞர் ஊழியர்கட்கான உண்மைக் கூலிகள் 5 சதவீதத்தால் அதிகரித்தன. 1978 இல் 1 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்த பாடசாலை ஆசிரியர்களுக்கான உண்மைக் கூலிகள் 1979 இல் 4 சத வீதத்தால் அதிகரித்து இருக்கையில் சிற்றூழியர்களுக்கானவை முந்திய ஆண்டின் 4 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக 9 சத வீதத்தால் அதிகரித்தன.

1979 இல் கூலி நிர்ணய சபைக்குட்பட்ட தனியார்துறை ஊழியர்களுக்கான பணக் கூலிகள் 27 சத வீதத்தால் அதிகரித்தன. விவசாயத்துறை வேலையாட்களின் பணக்கூலிகள் 28 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்திருக்கையில், கைத்தொழில் வர்த்தக வேலையாட்களுக்கான சுட்டெண் 17 சத வீதத்தால் அதிகரித்தது. பணக்கூலிகள், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் குறைவுபடுத்தப்பட்டபோது விவசாய வேலையாட்களின் உண்மைக் கூலிகள் 15 சதவீத அதிகரிப்பைக் காட்டுகையில் கைத்தொழில் வர்த்தக வேலையாட்களின் உண்மைக் கூலிகள் 5 சத வீதத்தால் அதிகரித்தன.

எனினும், அரச ஊழியர்களுக்கான மத்திய வங்கி கூலிவீத சுட்டெண்கள் தொடர்பான அளவுகளில் கொடுபடற்பால குறைந்த பட்ச சம்பளங்கள் கூலிகளின் அடிப்படையிலேயானதாகுமென்பது கவனிக்கப்படல் வேண்டும் தனியார் துறையின் கூலி நிர்ணய சபையினால் மேவப்பட்ட விவசாயம், கைத்தொழில் வர்த்தக வேலையாட்களின் தொழில் திணைக்களச் சுட்டெண்கள் கூலி நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்சக் கூலிகளை அடிப்படையாகக் கொண்டன. இது 1967 தொடக்கம் இது ''பணமதிப்புக் குறைப்புப் படிகளை''யும் உள்ளடக்கும் எனவே, கூலி சுட்டெண் கணக்கெடுப்பில். மேலதிக நேர ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. இவைகளிற்கு இடமளித்தும் 1979 இன் பொது விலை அதிகரிப்பு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் குறிக்கப்பட்டதிலும் பார்க்க மிகவும் கூடியது என்ற கருத்து விவசாய துறைகளுக்குப் புறம்பான உண்மைக் கூலிகள் 1979 இல் வீழ்ச்சியடைந்தது என்பதைக் காட்டுகின்றது.

## கூலிவீதச் சுட்டெண்கள்

1952=100




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.